| | | | |
|---|---|---|---|
| Headline | HIV: 50 Per cent has reduced in 11 years | | |
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 26 May 2014 | Color | Full Color |
| Section | News | Circulation | 35,000 |
| Page No | 5 | Readership | 125,000 |
| Language | Tamil | ArticleSize | 251 cm² |
| Journalist | NULL | AdValue | RM 1,278 |
| Frequency | Daily | PR Value | RM 3,833 |




## எச்ஐவி தொற்று நோய்:

# 11 ஆண்டுகளில் 50% வரை குறைந்துள்ளது!

### டத்தோஸ்ரீ டாக்டர் எஸ். சுப்ரமணியம் தகவல்

**கோலாலம்பூர், மே 26-**

மலேசியாவில் எச்ஐவி தொற்று நோயின் விகிதம் கடந்த 11 ஆண்டுகளில் 50 விழுக்காடு வரை குறைந்துள்ளது. கடந்த 2002ஆம் ஆண்டில் 6,978ஆக இருந்த இந்நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2013இல் 3,393ஆகக் குறைந் துள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் எஸ்.சுப்ரமணியம் தெரிவித்தார். இதற்கு முன் ஊசி குத்துவதன் மூலம் உயர்ந்த எச்ஐவி தொற்று நோய் கொண்டவர்களின் எண்ணிக்கை தற்போது தொடர்ச்சியாக குறைந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. இது உண்மையில் அமைச்சு மற்றும் மலேசிய எய்ட்ஸ் மன்றமும் இணைந்து தொடக்கிய எய்ட்ஸ் பாதிப்பைக் குறைக்கும் திட்டத்தின் பலனாகும்.



இத்திட்டம் 2006இல் தொடங்கப்பட்டதிலிருந்து 53 விழுக்காடாக இருந்த போதைப்பொருள் உட்கொள்பவர்களின் எண்ணிக்கை கடந்தாண்டில் 22 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இந்த எண்ணிக்கை உண்மையில் குறுகிய காலத்தில் பாதி அளவு குறைந்துள்ளதாக இம்மன்றத்தின் 12ஆவது ஆண்டுக் கூட்டத்தை அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைத்த பின்னர் டாக்டர் சுப்ரமணியம் செய்தியாளர்களிடம் பேசினார்.

அடுத்தாண்டில் ஒவ்வொரு லட்சம் மக்களும் 11 விழுக்காடு தொற்று நோய்களை ஒழித்து ஆயிரம் ஆண்டு மேம்பாட்டு இலக்கை அடைய முடியும் என்று அரசு நம்பிக்கைக் கொண்டுள்ளது. இந்த இலக்கை அடையும் அடிப்படையில் தற்போது மலேசியா வில் எச்ஐவி தொற்று நோய்க்கு காரணமாயிருக்கும் பாலியல் நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும். இந்த பாலியல் நடவடிக்கைகளினால் பரவும் எய்ட்ஸ் நோய் கடந்தாண்டில் மட்டும் நாட்டில் 74 விழுக்காடாக இருந்தது. எனினும், கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு இந்த எண்ணிக்கை 32 விழுக் காடாக இருந்தது என்று டாக்டர் சுப்ரமணியம் சுட்டிக் காட்டினார்.

எச்ஐவி நோய் குணப்படுத்த முடியாத ஒன்று என்பதால் பாலியல் நடவடிக்கைகள் மூலம் தொற்றும் இந்நோயை களைவதில் அமைச்சின் அதிகாரிகள் முழுமையான தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அந்த வகையில் பாலியல் நடவடிக்கைகளை முறியடிக்கும் செயற்குழு அமைத்தல், ஆண்களுக்கிடையே சுண்ணத்துச் செய்வதை ஊக்குவித்தல் ஆகியவை இந்த நோய் தொற்றுவதை 64 விழுக் காடாகக் குறைத்துள்ளது.

அத்துடன் இந்த எச்ஐவி தொற்றியிருப்பவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையுடன் உறவு கொள்ளாமல் நேர்மையாக இருந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதாக அவர் மேலும் கூறினார்.

Powered by: iSENTIA